# TAMIL

**(Second Language)**

***Maximum Marks : 80***

***Time Allowed : Three Hours***

***Answers to this Paper must be written on the paper provided separately.***

*You will **not** be allowed to write during the first **15** minutes.*

*This time is to be spent in reading the question paper.*

***The time given at the head of this Paper is the time allowed for writing the answers.***

*This paper comprises of two Sections; **Section A** and **Section B.***

*Attempt **all** the questions from **Section A**.*

*Attempt **four** questions from **Section B**, answering at least **one** question each from the **two** books you have studied and **any two** other questions from the same books that you have compulsorily chosen.*

*The intended marks for questions or parts of questions are given in brackets [ ].*

## SECTION—A (40 Marks)

*Attempt **all** questions from this section.*

**Question 1**

Write a short composition in **Tamil** of approximately **250** words on any **one** of the following topics :— [15]

பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்று** குறித்து 250 வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக :—

(i) மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவு என்ற கருத்தின் அடிப்படையில் பாரம்பரிய உணவுகள் மற்றும் அதன் பயன்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

(ii) ‘பள்ளியில் ஒரு நாள்’ – என்ற தலைப்பில் உன் பள்ளியில், காலை முதல் மாலை வரை உனக்கு நிகழ்ந்த சுவையான அனுபவங்களைக் கட்டுரையாக வடிக்கவும்.

(iii) தற்கால மாணவர்களின் கல்விக்கு மடிக்கணினியைப் பயன் படுத்துவதால், நன்மையே விளைகிறது என்று ஒருவரும், தீமையே விளைகிறது என்று மற்றொருவரும் பேசிக் கொள்வது போல ஓர் உரையாடல் தயார் செய்க.

(iv) ‘வாய்மையே வெல்லும்’ என்னும் பழமொழியினை மையமாக வைத்து சிறு கதை ஒன்றை எழுதுக.

**This Paper consists of 12 printed pages.**



*© Copyright reserved.*

(v) கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தைப் பார்த்து, உமக்குத் தோன்றும் எண்ணங்களையும் படம் குறிப்பிடும் செய்திகளையும் இணைத்து கட்டுரை ஒன்றை எழுதுக.



**Question 2**

Write a letter in **Tamil** in approximately **120** words on any **one** of the topics given below :— [7]

பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்று** குறித்து 120 வார்த்தைகளுக்கு மிகாமல் கடிதம் எழுதுக :—

(i) உங்கள் ஊரில் தனியே தங்கி வாழும் உன் பாட்டிக்கு, உங்களுடன் தங்கி வாழவும் உன்னை வழிநடத்த வேண்டியும் அழைத்து ஒரு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

(ii) நீ வாழும் பகுதியில் இரவில் அடிக்கடி ஒ பெருக்கி (Speaker) பயன்படுத்துவதால் முதியவர்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்படும் இன்னல்களை விளக்கியும்; அதைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் காவல்துறை ஆய்வாளருக்கு, புகார்க் கடிதம் ஒன்று எழுதுக.

**Question 3**

Read the passage given below and answer in **Tamil** the questions that follow, using your own words as far as possible :—

பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் ஐந்து வினாக்களுக்கும் விடை தருக :—

மஞ்செனத் திரண்ட மேனி வாய்ந்த மாக்காளைகளைக் கண்டு தமிழ்க் குலத்து இளைஞர் அஞ்சுவதில்லை. அவற்றின் கொட்டத்தை அடக்க மார்தட்டி நிற்பர். ஏறுகோள் என்பது அவர்களுக்கு உகந்த வீர விளையாட்டு. அக்காட்சி நிகழும் களத்தைச் சுற்றி ஆடவரும் பெண்டிரும் ஆர்வத்தோடு நிற்பர். செல்வச் சிறுவர் உயர்ந்த பரண்களில் அமர்ந்திருப்பர். ஏறுகளுடன் போராடுவதற்கு மிடுக்குடைய இளைஞர்கள் ஆடையை இறுக்கிக் கட்டி முறுக்காக நிற்பர். அப்போது முரசு அதிரும். பம்பை முழங்கும். கொழுமையுற்ற காளைகள் தொழுவி ருந்து ஒவ்வொன்றாக வெளிப்படும். களத்திலுள்ள கூட்டத்தைக் கண்டு கனைத்து ஓடிவரும் ஒரு காளை; கலந்து பாயும் ஒரு காளை; தலை நிமிர்ந்து, திமில் அசைத்து எதிரியின் வரவு நோக்கி நிற்கும் ஒரு காளை. அவற்றின் மீது மண்டுவர் நம் தமிழ்க் குல மைந்தர். கொம்பிலே உள்ள காளையின் விசையடங்கும்; வீறு ஒடுங்கும்; ஏறு சோர்ந்து விழும்.

வீர விளையாட்டில் என்றும் விருப்பமுடையவர் தமிழர். வேட்டையாடல், மல்லாடல், ஏறுகோள், ஏறுதழுவுதல் முத ய விளையாட்டுகள் மிகப் பழைமை வாய்ந்தனவாகும். வேட்டையைத் தொழிலாகக் கொண்டவர்கள் வேடர் என்றும், வேட்டுவர் என்றும் பெயர் பெற்றனர். முல்லை நில மாந்தர்கள், ஏறு தழுவும் விளையாட்டில் சிறந்து விளங்கினர். ஏறுகளின் உடல் உறுதியை அறியவும் நாடு காக்கும் இளங்காளைகளின் வீரம் அறியவும் ஏறு தழுவுதல் என்ற வீரவிளையாட்டை நம் தமிழ்க்குலம் பழங்காலந்தொட்டு இன்று வரை நடத்தி வருகிறது. சங்க இலக்கிய நூல்களில் உள்ள புறநானூற்றுப் பாட ல் ஏறுதழுவுதல் என்ற கருத்தைக் கொண்ட வரிகள் இடம் பெற்றுள்ளன. எனவே, இவ்விளையாட்டு சங்க கால மாந்தர்களின் விருப்பமான விளையாட்டாக இருந்ததை நாம் அறியலாம்.

மாடுகளில் ஆண்மை உடையது எருது. அதனை ஏறு என்றும் காளை என்றும் கூறுவர். வீறுடைய ஏறுகள் கடும் பு யைத் தாக்கும்; வ ய கொம்புகள்தான் அதன் ஆயுதங்கள்; வ மைக்கு உதாரணமாகக் கருதப்படும் பு களைக்கூட தமிழகக் காளைகள் அவற்றின் வ மையாலும் கொம்புகளாலும் வீழ்த்தி வெற்றிக் கொள்ளும். இத்தன்மை வாய்ந்த எருதைக் கொல்லேறு என்றும் மாக்காளை என்றும் தமிழ் மக்கள் போற்றுவர்.

காளையின் கொம்பைப் பிடித்தல் ஆண்மை, வாலைப் பிடித்தல் தாழ்மை, என்பது தமிழர்க் கொள்கை. வாலைப் பிடித்தவன் காளையின் காலால் உதைப்பட்டு மண்ணில் தள்ளப்படுவான். ஆதலால் கொம்பை விட்டு வாலைப்பற்றுதல் கோழையின் செயல்; தோல்வியின் அறிகுறி. காளைப் போரில் வெற்றி பெற்ற இளைஞரைக் காதலையும் வீரத்தையும் இரு கண்களாகக் கொண்ட தமிழ் மரபினர் வியந்து நோக்கினர்.

சங்க காலம் முதல் இன்று வரை நமது பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றை நாம் விளையாடி மகிழ்வது பெருமையே! தற்காலத்தில் ஜல் க்கட்டு விளையாட்டின் பொழுது உயிர் இழப்பு ஏற்படாமல் இருக்கவும், பார்வையாளர்களின் நலன் கருதியும், சில கட்டுப்பாடுகள் பின்பற்றப்படுகின்றன. இவை அனைத்தும் காளைகளுக்கும் ஜல் க்கட்டு வீரர்களுக்கும் நன்மையாகவே அமைகின்றன எனலாம்.

**வினாக்கள் :—**

(i) மிகப் பழைமையான வீர விளையாட்டுகள் யாவை ? வேட்டுவர் என்று அழைக்கப்படுபவர் யாவர் ? [2]

(ii) ஏறு தழுவுதல் சங்ககால மாந்தர்களின் விருப்பமான விளையாட்டு என்பதை நாம் எவ்வாறு அறியலாம் ? [2]

(iii) வீறுடைய ஏறுகள் எவ்வாறு காணப்படும் ? அவற்றைத் தமிழ் மக்கள் எவ்வாறு போற்றுவர் ? [2]

(iv) தமிழ் மரபினர் யாரை வியந்து நோக்கினர் ? ஏன் என்பதை விளக்குக. [2]

(v) தற்கால ஜல் க்கட்டும் கட்டுப்பாடுகளும் குறித்து எழுதுக. [2]

**Question 4**

Choose the correct answer for the following GRAMMAR MCQ according to the instructions given :—

வினாவிற்குரிய விடையை அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளபடி, தேர்ந்தெடுத்து, உள்வினா எண்ணுடன் முழுமையாக எழுதுக :—

(i) திராவிட மொழிகளில் மிகவும் **<u>தொன்மை</u>** வாய்ந்த மொழி தமிழ் மொழி.

(a) பெருமை

(b) இனிமை

(c) பழைமை

(d) புதுமை

[கோடிட்ட சொல் ன் சரியான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக] [1]

(ii) கரை, கறை

(a) ஓரம், அழுக்கு

(b) அழுக்கு, ஓரம்

(c) குற்றம், ஓரம்

(d) ஓரம், முடிவு

[ஒ வேறுபாட்டுச் சொற்களின் சரியான விடையைத் தேர்வு செய்க] [1]

(iii) மீனவன் வீசிய வலையில் மீன்கள் சிக்கியது.

(a) மீனவன் வீசிய வலையில் மீன் சிக்கின.

(b) மீனவன் வீசிய வலையில் மீன்கள் சிக்கின.

(c) மீனவன் வீசிய வலைகளில் மீன்கள் சிக்கியது.

(d) மீனவன் வீசிய வலையில் மீன்கள் சிக்கியது.

[இலக்கணப் பிழை இல்லாத வாக்கியத்தைத் தேர்வு செய்க] [1]

(iv) No pain no gain.

(a) 'அறிவே ஆற்றல்'.

(b) 'உழைப்பின்றி ஊதியமில்லை'.

(c) 'வாழு வாழ விடு'.

(d) 'பருவத்தே பயிர் செய்'.

[ஆங்கிலப் பழமொழிக்குப் பொருத்தமான தமிழ்ப் பழமொழியைத் தேர்வு செய்க] [1]

(v) கை தொழில் ஒன்றை கற்று கொள்.

(a) கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்.

(b) கை தொழில் ஒன்றைக் கற்று கொள்.

(c) கை தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்.

(d) கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்.

[சரியான வல்   ன மெய்களிட்ட வாக்கியத்தைத் தேர்வு செய்க] [1]

(vi) வேலையாட்கள் தோப்பில் என்ன செய்கிறார்கள் என்றார் முதலாளி.

(a) "வேலையாட்கள் தோப்பில் என்ன செய்கிறார்கள்" என்றார் முதலாளி.

(b) வேலையாட்கள் தோப்பில் என்ன செய்கிறார்கள்? என்றார் முதலாளி.

(c) "வேலையாட்கள் தோப்பில் என்ன செய்கிறார்கள்!" என்றார் முதலாளி.

(d) "வேலையாட்கள் தோப்பில் என்ன செய்கிறார்கள் ?" என்றார் முதலாளி.

[சரியான நிறுத்தற்குறிகள் இட்ட வாக்கியத்தைத் தேர்வு செய்க] [1]

(vii) பு   ஊருக்குள் வந்ததால் மக்கள் பயந்து ஓடுகிறார்கள்.

(a) பு   ஊருக்குள் வந்திருப்பதால் மக்கள் பயந்து ஓடுகிறார்கள்.

(b) பு   ஊருக்குள் வந்ததால் மக்கள் பயந்து ஓடினார்கள்.

(c) பு   ஊருக்குள் வந்தால் மக்கள் பயந்து ஓடுவார்கள்.

(d) பு   ஊருக்குள் வரும்பொழுது மக்கள் பயந்து ஓடுவார்கள்.

[இறந்தகால வாக்கியத்தைத் தேர்வு செய்க] [1]

(viii) எனக்குப் பஸ்ஸில் டிராவல் செய்யப் பிடிக்கும்.

(a) பேருந்தில் செல்ல

(b) பேருந்தில் சுற்ற

(c) சிற்றுந்தில் பயணம்

(d) பேருந்தில் பயணம்

[ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தேர்வு செய்க] [1]

## SECTION—B (40 Marks)

*Questions from only **two** textbooks are to be answered.*

*Attempt **four** questions from this section.*

*You must answer at least **one** question from each of the **two** books you have studied and any **two** other questions from the same books that you have chosen.*

**சரித்திரச் சம்பவங்கள்**

**ஆசிரியர் - வாண்டுமாமா**

**(Charitra Sambavangal)**

**(By - Vaandumama)**

**Question 5**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow :—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக :—

பாரத மக்களின் நினைவில் நீங்காத இடம் பெற்ற நாள் ஒன்று உண்டு. அதுதான் 1540 ஆம் ஆண்டு, மே' மாதம் ஒன்பதாம் தேதி. அன்றுதான் ராஜஸ்தானின் புகழை, மேவாரின் மேன்மையை, சித்தூரின் சிறப்பை உயர்த்திய உத்தம புத்திரன் அவதரித்த நாள்.

– மஹாராணா பிரதாப்

– Maharana Prathap

**வினாக்கள் :-**

(i) மானவர்மனின் ராஜபக்தியை விளக்குக. [2]

(ii) 'தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும்' - என்ற பழமொழிக்கு உதாரணமாகச் சக்திசிங் திகழ்ந்த விதத்தை எழுதுக. [2]

(iii) மேவாரின் அரசவையில் சக்திசிங்கிற்கு என்ன நேர்ந்தது ? [3]

(iv) 'தன் குல கௌரவத்தை விட்ட ராஜபுத்திரர்கள் - எத்தனைப் பெரியவர்களாக இருந்தாலும், பிரதாப் அவர்களை மதிக்கமாட்டார்' என்பதை விளக்குக. [3]

**Question 6**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow :—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக :—

ராஜபுத்திரர்களின் வீரம் உலகம் அறிந்த ஓர் ஒப்பற்ற அற்புதம். நேர்மைக்கும் உண்மைக்கும் உறைவிடம் அவர்கள், நன்றி மறவாத நாயகர்கள். ராஜபுத்திரர்களின் வீரத்தைக் கேட்கும் கோழையும் கூட வாள் வீசப் பாய்ந்து எழுவான். முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தது இது…

– மாவீரர் சத்ரஸால்
– Maaveerar Sathrasal

**வினாக்கள் :-**

(i) சத்ரஸாலுக்குக் கங்கணத்தை அனுப்பியவர் யார் ? அதற்கான காரணத்தை எழுதுக. [2]

(ii) ‘பண்டி’ நாட்டின் மன்னர் யார் ? அவரைப் பதவியில் அமர்த்தியவர் யார் ? ஔரங்கசீப் பற்றி ஒரு சில வரிகள் எழுதுக. [2]

(iii) மொகலாயர்கள் கொண்ட மனப்பால் யாது ? அது எவ்வாறு முறியடிக்கப்பட்டது ? [3]

(iv) ராஜபுத்திரர்கள் போர்க்களத்தில் பின்வாங்கியதன் காரணம் என்ன ? சத்ரஸால் அவர்களிடம் கர்ஜித்துக் கூறியது என்ன ? [3]

**Question 7**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow :—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக :—

மன்னருக்கு அளிக்கப்படும் விருந்துக்குப் போகவே கிளம்பிக் கொண்டிருக்கிறான் இந்தக் கயவன். நான் இவனாக அந்த விருந்தில் கலந்து கொள்ளுகிறேன். அடையாளம் தெரியாதபடி அனைவரும் முகமூடி அணிந்து வருவார்களாதலால் என்னை யாரும் இனம் காண முடியாது என்ற முடிவோடு…

– மல்லன் மாறப்பன்
– Mallan Maarappan

**வினாக்கள் :-**

(i) சத்திரத்தின் வாச ல் மாறப்பனைச் சவுக்கால் அடிக்க முற்பட்டவன் யார் ? அவனுக்குப் புத்தி வந்ததா ? [2]

(ii) அச்சுதர் மாறப்பனிடம் தன்னைப்பற்றிக் கூறியது என்ன ? [2]

(iii) 'விஜயதசமிப் பெருவிழா' - குறிப்பு வரைக. [3]

(iv) குற்றம் சாட்டப்பட்ட மாறப்பனுக்குப் போட்டியில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டதா ? பறங்கியன் அலறக் காரணம் என்ன ? மாறப்பன் குற்றமற்றவன் என்று பி ப் கூறியனவற்றை எழுதுக. [3]

## இராஜராஜ சோழன்

## சரித்திர நாடகம்

## ஆசிரியர் - அரு. இராமநாதன்

## (Rajaraja Cholan)

## (Historical Drama)

## (By - R. Ramanathan)

**Question 8**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow :—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக :—

நம் சோழகுல சூரியோதயத்தின் முன் பாண்டியர்களின் சந்திரோதயம் மறைந்து விட்டதே என்று அமரசங்க பாண்டியன் மனம் பதறலாம்; சோழர்களின் பு க்கொடி முன் சேரர் விற்கொடியின் அம்பு கூர்மை மழுங்கி விட்டதே என்று சேரன் பாஸ்கரரவிவர்மன், திருவடி மனம் சினக்கலாம்..

**வினாக்கள் :-**

(i) தமிழன்னையின் சிலை முன் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் யாவை ? [2]

(ii) இளங்கோவடிகள் கண்ட கனவு யாது ? [2]

(iii) 'பன்னெடுங் காலம்...' எனத்தொடங்கும் கருவூர்த்தேவரின் திருவிசைப்பாவை எழுதுக. [3]

(iv) யார் யாருடைய காலம் தொட்டு திருவேங்கடம் தமிழ்நாட்டின் வட எல்லையாக இருந்தது ? வட எல்லை மீதான உரிமையை நிலைநாட்ட போரிட்டவர் யார் ? அவரது நினைவாக என்ன செய்யப்பட்டது ? [3]

## Question 9

Read the extract given below and answer in **Tamil** the questions that follow :—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக :—

நெடுந்தூரப் பயணந்தான்! ஆனால் அடிவானத்திற்கு அப்பாலும் தமிழர் உறவு கொள்ளத் தயங்கக் கூடாது… தூதுக்குழுத் தலைவரே, சீன நாட்டு மன்னருக்கு இராஜராஜனின் பரிசுகளாக, ஒரு முத்து மகுடமும், மணியார ஆடையும், திருமுகமும் தருகிறேன். நீங்கள் சீன நாட்டி ருந்து தாயகம் திரும்பி வரும்போது…

**வினாக்கள் :-**

(i) கடல் கடந்து வாழும் தமிழர்களுக்கான செய்திகளாக இராஜராஜன் கூறியனவற்றை எழுதுக. [2]

(ii) எது விசாலமான ஒரு நாட்டின் உண்மையான பாதுகாப்பு என்று விமலாதித்தன் கூறினான் ? [2]

(iii) கர்ம வீரனுக்குரிய செயல்களாக, பாலதேவர் கூறியவற்றையும் அதற்கு இராஜேந்திரன் கூறிய பதில்களையும் விளக்குக. [3]

(iv) வேங்கி நாட்டுப் பாசறைக்குத் துறவியாக வேடமிட்டு வந்தவர் யார் ? அவர் அங்கு வருவதற்கான காரணம் என்ன ? படையழிவைத் தவிர்க்க விமலாதித்தன் எடுத்த முடிவு யாது ? [3]

## Question 10

Read the extract given below and answer in **Tamil** the questions that follow :—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக :—

அத்தை… உங்கள் பெயரை எனக்கு வைத்தப் பெருமையில் என்னையறியாமல் உங்களிடமே பலமுறை துடுக்காகப் பேசியிருப்பேன். என் குணங்களை மறந்து என் குற்றங்களை நீங்கள் மன்னிக்காவிட்டாலும், என் வாழ்நாள் முழுவதும் உங்கள் பிரியத்தை மறக்க மாட்டேன்.

**வினாக்கள் :-**

(i) ‘சுரங்கம்’ குறித்து குந்தவிக்கும் குந்தவ்வையாருக்கும் இடையே நடந்த உரையாடலை எழுதுக ? [2]

(ii) இராஜராஜ சோழன் விமலாதித்தனைச் சோதனைக்கு உள்ளாக்க விரும்பியது ஏன் ? [2]

(iii) குந்தவியை மணக்க விரும்பிய விமலாதித்தன், இராஜராஜர் பாவலர்களுக்கு வழங்கிய பரிசுகளாக கூறியனவற்றுள் ஆறு கருத்துகளை எடுத்தெழுதுக. [3]

(iv) “துரோகியின் உதட்டிலும் சிரிப்பை எதிர்பார்க்கும் இன்ப நேரம் இது..” - யார் கூற்று ? விவரி. [3]

## வீரபாண்டிய கட்டபொம்மன்
## ஆசிரியர் - கே. ஜீவபாரதி
## (Veerpandiya Kattabomman)
## (By - K. Jeeva Bharathi)

**Question 11**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow :—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக :—

தமக்கு ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்து உதவிய 'பஞ்சபாண்டிய ஜெகவீரபாண்டி'யனுக்கு நன்றி செலுத்தும் வகையில், இந்தக் கோட்டைப் பகுதிக்குப் 'பாஞ்சாலங்குறிச்சி' என்று ஆதி கட்டபொம்மு பெயர் சூட்டி மகிழ்ந்தான்... இந்த ஆதி கட்டபொம்மு காலத்தில் இருந்துதான் கட்டபொம்மன் பரம்பரை பாஞ்சாலங் குறிச்சியில் இருந்து அரசாளத் தொடங்கியது.

**வினாக்கள் :-**

(i) வீரபாண்டிய கட்டபொம்மனின் சகோதரிகள், மனைவி ஆகியோர் பற்றி குறிப்பு வரைக. [2]

(ii) வீரபாண்டிய கட்டபொம்மனின் முதல் மூன்றாண்டுகால ஆட்சி எவ்வாறு இருந்தது ? [2]

(iii) இந்திய மண்ணில் காலூன்றிய முதல் வெளிநாட்டு மன்னன் யார் ? அவனைத் தொடர்ந்து வந்த, முகமது கஜினி பற்றி எழுதுக. [3]

(iv) இராபர்ட் கிளைவ், பூ த்தேவன் - இவர்கள் பற்றி உமக்குத் தெரிந்த செய்திகளை எழுதுக. [3]

**Question 12**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow :—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக :—

'...வரி வசூ க்க கலெக்டர் என்ற பதவியை ஏற்படுத்தி, அந்தப் பதவியில் ஆங்கிலேயர்களை நியமிப்பதென்றும், பாளையங்களைச் சர்வே செய்து, அவற்றின் எல்லைகளை ஒழுங்குபடுத்துவதென்றும், ஒரு பாளையத்திற்குச் சொந்தமான ஒன்றிரண்டு கிராமங்களை மற்றொரு பாளையத்தோடு சேர்ப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.'

**வினாக்கள் :-**

(i) ஆங்கிலேயர், எதிர்காலத்தில் ஆபத்தைச் சந்திக்க நேரும் என்று அச்சம் கொண்டதன் காரணம் என்ன ? [2]

(ii) ஆங்கில அதிகாரி டேவிசனிடம் கட்டபொம்மன் கூறிய செய்தி என்ன? [2]

(iii) கலெக்டராக வெள்ளைக்காரன் எவன் வந்தாலும் இந்த நிலைதான் தொடருமோ என்று கட்டபொம்மன் அச்சம் கொள்ளக் காரணம் என்ன? மேற்கொண்டு அவர் செய்த செயல் என்ன ? [3]

(iv) தானாபதிப் பிள்ளையைக் கட்டபொம்மனிடமிருந்து பிரிக்க லூஸிங்டன் தீட்டிய திட்டம் என்ன ? அவர் கட்டபொம்மனுக்கு எழுதிய கடிதம் குறித்து எழுதுக. [3]

**Question 13**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow :—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக :—

கோட்டையின் வடக்கு வாயிலை ஊமைத்துரையும், தெற்கு வாயிலை வெள்ளையத் தேவனும் தலைமை ஏற்பதென முடிவானது. கோட்டைச் சுவர்களின் மீதிருந்து பாஞ்சாலங்குறிச்சிப் படைவீரர்கள், ஈட்டி எறிந்து, வெள்ளையர் படையைத் தடுத்துக் கொண்டிருந்தனர்.

**வினாக்கள் :-**

(i) ஜாக்ஸன் துரைக்கும், வீரபாண்டிய கட்டபொம்மனுக்கும் மொழி பெயர்ப்பாளர்களாக இருந்தவர்கள் யாவர் ? [2]

(ii) வீரபாண்டிய கட்டபொம்மனைத் தூக்கி டுவதற்கு முன் அவரிடம் பானர்மேன் காட்டிய ஆசை வார்த்தைகள் யாவை ? அதற்கு வீரபாண்டியனின் பதில் என்ன ? [2]

(iii) புதுக்கோட்டைப் பாளையத்தின் மன்னர் யார் ? அவர் கட்டபொம்மனுக்குச் செய்த துரோகம் குறித்து எழுதுக. [3]

(iv) வீரபாண்டிய கட்டபொம்மன் மீது சுமத்தப்பட்ட வழக்கு விசாரணையின் போது வழக்குத் தொடுத்தவர், எதிர்த்து வழக்குப் போட்டவர், நீதிபதி ஆகியோர் யாவர் ? இவ்வழக்கு விசாரணையில் யாருக்கு வெற்றி கிடைத்தது ? [3]